**தூத்துக்குடி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(ஜூன் 13-ம் தேதி முதல் ஜூன் 17-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (9.6.15- 11.6.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.2 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 32- 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 27 |
| வானம் (ஆக்டா) | 4- 6 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 70- 87 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 72- 83 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 11- 26 |
| காற்றின் திசை | 200- 230 |

**17.6.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| **வானிலை காரணிகள்** | **வானிலை முன்னறிவிப்பு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **நாள் 1 13.6.15** | **நாள் 2 14.6.15** | **நாள் 3 15.6.15** | **நாள் 4 16.6.15** | **நாள் 5 17.6.15** |
| மழை (மி.மீ.) | 12 | 0 | 0 | 4 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 34 | 34 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27 | 27 | 27 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 74- 87 | 74- 82 | 74- 82 | 72- 82 | 72- 82 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 14/ தென்மேற்கு | 14/ மேற்கு | 14/ தென்மேற்கு | 14/ மேற்கு | 14/ மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| **பயிர்/ சாகுபடி சூழல்** | **பருவம்/ சாகுபடி செயல்கள்** | **வேளாண் வானிலை ஆலோசனை** |
|---|---|---|
| நெல் | துரித தூர்கட்டும் பருவம் | துரித தூர்கட்டும் பருவத்திலுள்ள நெற்பயிருக்கு அசோல்லா நுண்ணுயிர் உரத்தை நட்ட 30ம் நாளில் களையெடுக்கும்போது மண்ணோடு சேர்க்கவும். இப்பருவத்தில் தழைச்சத்து இடுவது மிக |

| | | |
|---|---|---|
| | | முக்கியமாதலால் இலை வண்ண அட்டையை பயன்படுத்தி இலையின் வண்ணத்தை கண்காணித்து தேவைக்கேற்ப தழைச்சத்து உரமிடவும். பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தும் விதத்தில் மண்ணில் முடி அளவு தடிமன்கொண்ட வெடிப்புகள் தோன்றிய பின்பு 2.5 செ.மீ. அளவு நீர் பாய்ச்சவும். |
| பாசிப்பயறு | விதைத்தல் | இறவையில் பாசிப்பயறு சாகுபடிக்கு மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்ட இரகங்களான VBN 2, VBN 3 மற்றும் CO (Gg) 7 ஆகிய இரகங்களை தேர்வு செய்யவும். விதை நேர்த்தி செய்ய ஒரு பாக்கெட் (200 கிராம்/ எக்டர்) ரைசோபியம் சி.ஆர். எம். 6, ஒரு பாக்கெட் (200 கிராம்/ எக்டர்) பாஸ்போபாக்டீரியா மற்றும் தாவர வளர்ச்சி ஊக்குவிக்கும் பாக்டீரியா ஒரு பாக்கெட் (200 கிராம்/ எக்டர்) ஆகியவற்றுடன் ஆறிய கஞ்சி கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.<br><br>நடவு வயலில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நுண்உரக் கலவை எக்டருக்கு 5 கிலோவை ஊட்டமேற்றிய தொழுஉரமாக அளிக்கவும் (ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிக்க 1:10 என்ற விகிதத்தில் நுண்உரக் கலவை மற்றும் தொழுஉரத்தை கலந்து ஒரு மாதம் காற்றுப்புகாமல் வைத்திருக்கவும்).<br><br>அடியுரமாக 25: 50: 25 கிலோ/ எக்டர் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவும். மேலும் 20 கிலோ கந்தக சத்து மற்றும் 25 கிலோ ஜிங்க் சல்பேட் ஆகியவற்றை இடவும். |
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்க்கவும். |
| வாழை | பூமொட்டு உருவாகும் பருவம் | |

குறுஞ்செய்தி- ஜுன் 13, 16& 17-ல் மழை: 12, 4& 2 மி.மீ. பாசிப்பயறு விதைத்தல்- VBN 2, VBN 3& CO(Gg)7 இரகங்களை தேர்வு செய்யவும், விதையளவு 20 கிலோ/எக்டர், இடைவெளி 30x 10 செ.மீ.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி